பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 70

செவ்வாய்க்கிழமை
04 பெப்ரவரி 2025

தை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**நெல்லுக்கு நிர்ணய விலை எங்கே?**
» 06

## பீற்றூட் உற்பத்தி தொடர்பான தரவுகள் சேகரிப்பில் இல்லை!

### ஆனால் களப்பயணங்களுக்காக 40ஆயிரம் ரூபா எரிபொருட்செலவு

யாழ்ப்பாணம், பெப். 4
வடமாகாண விவசாயத் திணைக்களத்தில் யாழ். மாவட்டத்தில் பயிரிடப்படும் பீற்றூட் பயிர்ச்செய்கை தொடர்பிலான தரவுகள் சேகரிப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்படும் அதே வேளை, கள விஜயங்களுக்காக மாத்திரம் கடந்த ஆண்டில் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. யாழ். மாவட்ட ☞ 11

ஈஸ்டர் தாக்குதல் வழக்கு

# கோத்தாபய கைதாவார்?



### முன்னாள் அமைச்சர் கம்மன்பில ஆருடம்

**கொழும்பு, பெப்ரவரி 4**

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகள் என்ற அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைக் கைதுசெய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.** ☞ 11

## அநுரவுக்கு அச்சுறுத்தல் இல்லை!

கொழும்பு, பெப். 4
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உயிரச்சுறுத்தல் இல்லை. இலங்கையில் அதிகளவு உயிரச்சுறுத்தல் உள்ள நபரென்றால் அது மஹிந்த ராஜபக்சதான் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் ☞ 11

## உள்ளூராட்சித் தேர்தல்: இன்னும் தீர்மானமில்லை

கொழும்பு, பெப். 4
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இது ☞ 11

## இன்று கரிநாள்

### போராட்டத்துக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4
ஸ்ரீலங்காவின் சுதந்திரதினமான இன்று தமிழர்களின் கரிநாள் என்பதை வலியுறுத்தி, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பேரெழுச்சிப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.
வடக்கு – கிழக்கு மாகாணங்களில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகச் செயற்படும் அமைப்புகளால் இந்தப் போராட்டங்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும், படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், பௌத்த ஆக்கிரமிப் ☞ 11

## தமிழ்த் தேசிய கீதத்தால் எந்த மாற்றமும் ஏற்படாது

### கஜேந்திரகுமார் எம்.பி. அநுர அரசுக்குப் 'பளீர்'

யாழ்ப்பாணம், பெப். 4
அடிமைச்சாசனம் போன்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பை வைத்துக்கொண்டு, தமிழில் தேசியகீதம் பாடுவதால் எந்த மாற்றமும் ஏற்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ☞ 11

## 285 கைதிகள் விடுதலை

கொழும்பு, பெப். 4
ஸ்ரீலங்காவின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, 285 கைதிகள் இன்று ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவுள்ளனர். 279 ஆண் கைதிகள் மற்றும் 6 பெண் கைதிகள் என 285 கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர் ☞ 11

## சுதந்திரதின எதிர்ப்பு 7 பேருக்குத் தடை!

மட்டக்களப்பு, பெப். 4
மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சுதந்திரதினமான இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு மூன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேருக்குத் தடையுத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் ☞ 11

## போராட்டத்துக்கு தடைவிதிக்க யாழ்ப்பாணம் நீதிமன்று மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 4
சுதந்திரதினமான இன்று யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில், 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த போராட்டத்துக்குத் தடைவிதிக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.
இன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகாக இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. ☞ 11

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுத் தெற்குப் பகுதியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
உடலில் கயிறு கட்டிய நிலையில் குளமொன்றில் இருந்தே ☞ 11



'ஊழ்வினை உறுத்தினால் பாழ்படுவார் பாதாளம் போகத்தானே வேணும்'

## இவ்வருடம் இதுவரை 11 துப்பாக்கிச் சூடுகள்!

### தொடர்புடைய மூவர் வெளிநாட்டில் கைது



கொழும்பு, பெப். 4
நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 11 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

## நீதிமன்றத் துப்பாக்கிச்சூடு: மேலும் ஒருவர் கைதானார்

மன்னார், பெப். 4
கடந்த சில தினங்களுக்கு முன்னர் மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில், மேலும் ஒரு சந்தேகநபர் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இருவர் படுகொலை செய்யப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூடு தொடர்பில் ஏற்கனவே சிலர் கைது ☞ 11

மக்கள் மனச் சாட்சியாய் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறுமி உயிரிழப்பு

ஜேர்மனியின் ஒப்லேடன் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், 11 வயதான தமிழ்ச் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார். (ம)

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 03.02.2025 | 3978 | G | 02 09 60 77 | விசேட எழுத்து G |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 03.02.2025 | 1045 | | 14 34 35 51 | வெற்றி இலக்கினம் மீனம் |
| NLB ஜய | 03.02.2025 | 0004 | V | 2 9 1 5 | |
| மெகா பவர் | 03.02.2025 | 2084 | X | 10 45 50 59 | சுப்பர் இலக்கம் 19 |
| மஹஜன சம்பத | 03.02.2025 | 5736 | A | 6 8 9 1 8 7 | |
| தன நிதானய | 03.02.2025 | 1766 | W | 27 40 59 77 | விசேட எழுத்து W |
| அத சம்பத | 03.02.2025 | 311 | A | 9 1 8 7 | |

# சம்பள அதிகரிப்புக்காக ரூ.90 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, பெப்.4

**அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் 90 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

தம்புத்தேகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரச சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அரசசேவையை முழுவதுமாக மாற்றியமைக்க ஜனாதிபதி அமைச்சரவையில் பத்திரமொன்றை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். அரசசேவையில் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம். அதற்காக சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எதிர்வரும் 17ஆம் திகதி வரவு செலவுத் திட்ட ஆவணத்தில், 90 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், பிரதானமாக அரசாங்க ஊழியர்கள் 13 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

## அநுர அரசுக்கு அனுபவம் இல்லை

*கம்மன்பில சுட்டிக்காட்டு*

கொழும்பு, பெப்.4

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்க ஆட்சியாளர்களுக்கு அனுபவம் இல்லை. அதனால் அவர்களின் பயணம் சாதகமானதாக அமையவில்லை என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. எமது மக்கள் புத்தியைப் பயன்படுத்தாது, மனதைப் பயன்படுத்தியே வாக்களித்து வருகின்றனர். அநுரகுமார புத்திசாலி. ஆனாலும் அனுபவம் இல்லை. அவர்களின் அமைச்சரவைக்கு அனுபவம் இல்லை. அதனால்தான் அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில் தமது இயலாமையை மறைப்பதற்காக எதிரணியை ஒடுக்குவதற்குத் தயாராகிவருகின்றனர். இதனை எதிர்கொள்வதற்கு எதிரணிகள் ஒன்றுபடவேண்டும் - என்றார். (ச-33-44)

## அநுரவின் யாழ். பயணத்தில் விமானப் பயன்பாடு இல்லை

*பாதுகாப்பு அமைச்சு விளக்கம்*

கொழும்பு, பெப்.4

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய யாழ்ப்பாணப் பயணத்தின் போது மூன்று விமானங்கள் பயன்படுத்தப்பட்டன என்று வெளியான செய்திகள் தவறானவை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணத்தின் விமானப்படை விமானங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது. ஜனாதிபதி உத்தியோகபூர்வ காரில் பயணம் மேற்கொண்டார் என்றும், ஜனாதிபதி விமானங்களைப் பயன்படுத்தினார் என்று சமூக ஊடகங்களில் பரவும் செய்திகள் ஆதாரமற்றவை என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## கடவுச்சீட்டு நெருக்கடி விரைவில் தீர்க்கப்படும்

கொழும்பு,பெப்.4

கடவுச்சீட்டு நெருக்கடிக்கு விரைவில் தீர்வுகாணப்படும் எனப் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

தற்போது மாதாந்தம் 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்படுவதுடன் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இதனை மாதாந்தம் 80 ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதேவேளை இலத்திரனியல் கடவுச்சீட்டு அச்சிடுவதற்குரிய இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் இலத்திரனியல் கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-33,6)

| லொத்தர் | திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் / வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத | 03.02.2025 | திங்கட்கிழமை | 0444 | N | 8 1 0 4 4 4 | |
| Super Ball | 03.02.2025 | திங்கட்கிழமை | 2710 | P | 16 18 25 65 | |
| சனிதா | 03.02.2025 | திங்கட்கிழமை | 4871 | V | 24 25 36 53 | |
| லக்ன ராசி | 03.02.2025 | திங்கட்கிழமை | 4422 | | 27 30 39 46 | தனுசு |
| KAPRUKA | 03.02.2025 | திங்கட்கிழமை | 1886 | R | 34 35 40 70 | சுப்பர் இலக்கம் 38 |
| அத கோடிபதி | 03.02.2025 | திங்கட்கிழமை | 2536 | V | 02 15 39 73 | |
| JAYODA | 03.02.2025 | திங்கட்கிழமை | 2100 | L | 17 18 26 68 | |



## கட்டாக்காலிக் கால்நடைகளால் வீதி விபத்துகள் அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ- 35 பிரதான வீதியில் கட்டாக்காலி கால்நடைகளால் வீதி விபத்துகள் ஏற்படுகின்றன என்று பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புளியம்பொக்கணை, தருமபுரம், விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளில் இரவுபகலாக கால்நடைகள் நடமாடித்திரிவதுடன் படுத்துறங்குகின்றன. இதனால் இந்த வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன் விலைமதிப்பற்ற உயிராபத்தும், பொருள் சேதங்களும் நேரிடுகின்றன.

எனவே வீதிகளில் நடமாடும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-41-113)

## மின்சாரவேலியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு, பெப்.4

கொக்கட்டிச்சோலை, பன்சேனைக் கிராமத்தில் யானைப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவார் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை நடந்துள்ளது. முலைக்குடாவில் வசிக்கும் 39 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். (எ-இ)

## போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது

வவுனியா பெரியார்குளம் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா, பெரியார்குளம் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையைத் தொடர்ந்தே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புடன் செயற்பட்டாலே பொருளாதார மாற்றம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.4
நாட்டில் நிகழ்ந்தது அரசியல் மாற்றமே தவிர பொருளாதார மாற்றம் இல்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நாம் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம். அதேவேளை, அனைத்து மக்களின் அபிவிருத்தியையும் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது பொருளாதாரம் சுபீட்சத்தில் இல்லை. நாட்டில் அரசியல் மாற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. பொருளாதார மாற்றம் ஏற்படவில்லை. பொருளாதாரத்தில் தலையிட்டு அதை மாற்ற வேண்டிய நிலைமை இருக்கின்றது. அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படுவதன் ஊடாகவே அதை நாம் அடையமுடியும் - என்றார். (ஏ-125)

## மாணவர்களுக்கு மாவா; சிக்கினார் சந்தேகநபர்

வவுனியா, பெப்.4
வைரவபுளியங்குளம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியாப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றது.

விற்பனைக்குத் தயாராக இருந்த 140 கிராம் மாவா, ஒரு கிலோ மாவா கலந்த பாக்கு உள்ளிட்ட போதைப்பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின்பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-25, 110)



## எல்லைதாண்டிய மீன்பிடி இந்திய மீனவர்கள் கைது

கொழும்பு, பெப்.4
தலைமன்னாருக்குத் தெற்காகவுள்ள கடற்பகுதியில் நேற்று அதிகாலை சட்டவிரோதமாகக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 10 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் மண்டபம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களை மன்னார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டப்பட்டுள்ளது. (ஏ-56)

## தொழிலதிபர் பாலேந்திரா காலமானார்

கொழும்பு, பெப்.4
இலங்கையின் பெரும் தொழிலதிபரும் நிர்வாகியுமான தேசமான்ய கந்தையா பாலேந்திரா தனது 85 ஆவது வயதில் காலமானார்.

இவர் இலங்கையில் பல பிராந்தியங்களிலுள்ள நிறுவனங்களில் பல பிரதான பதவிகளை வகித்துள்ளார். இவர் மிகப்பெரிய கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் லிமிடெட் நிறுவனத்தின் முதல் இலங்கைத் தலைவராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார்.

பிரண்டிக்ஸ் லங்கா லிமிடெட் மற்றும் கொமன்வெல்த் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தெற்காசியப் பிராந்திய நிதியத்தின் தலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார். (ஏ-இ)

## உப்புக்கு பற்றாக்குறை மார்ச்சில் சீராகும்

கொழும்பு, பெப்.4
மார்ச் மாதத்தில் உப்பு அறுவடை தொடங்குவதால் சந்தையில் உப்புப் பற்றாக்குறை சீராகும் என்று ஹம்பாந்தோட்டை உப்பு நிறுவனத்தின் தலைவர் டி.கே. நந்தன திலகா தெரிவித்துள்ளார்.

மழைப்பொழிவு குறைந்து வருவதால் உப்பு உற்பத்தி தற்போது வழக்கம்போல் நடைபெறுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## 15 இலட்சம் கிலோ தேங்கிய உணவுப்பொருள்கள் பழுதடைந்த நிலையில் மீட்பு!!

கொழும்பு,பெப்.4
கடந்த 2023 ஆம் ஆண்டு பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கென உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படாது பழுதடைந்த நிலையில் தற்போது மீட்கப்பட்டுள்ளன.

வியாங்கொடையிலுள்ள உணவுக்களஞ்சியத்திலிருந்தே 15 இலட்சம் கிலோ உணவுப்பொருள்கள் இவ்வாறு பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் குறித்த உணவுக் களஞ்சியத்திலிருந்த அரிசி, பருப்பு என்பவற்றைச் சோதனையிட்டபோதே அவை பழுதடைந்திருந்தமை தெரியவந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-33-6)




பஸ்பமாகிக் கொண்டிருக்கிற நாட்டுக்கு 'ஸ்பா' இல்லாததுதான் பெருங்குறை எண்டமாதிரிச் சிலர் நடக்கினம். 'ஸ்பா' எண்டா என்னெண்டு தெரியும் தானே? உந்த மசாஜ் சென்ரர்களைத்தான் அப்பிடிச் சொல்றது. நீர்கொழும்புப் பக்கம் போனியளெண்டால் முழத்துக்கு முழம் உப்பிடி மசாஜ் சென்ரர்களைப் பாப்பியள். மசாஜ் சென்ரர் எண்டு சொல்லிப்போட்டு அங்க பாலியல் தொழில்தான் நடக்கிறது. அதையும் கேள்விப்பட்டிருப்பியள். இப்பிடியான 'ஸ்பா' எண்ட வியாதி இவ்வளவு நாளும் இஞ்ச இல்லாமல் இருந்தது. இப்ப அதுகும் தொத்தத் தொடங்கிட்டுது.

போனமாசம் முல்லைத்தீவில ஹொட்டல் ஒண்டு திறந்தவை. அந்தக் ஹொட்டலில இப்பிடி மசாஜ் செய்யிற இடத்தைத் திறந்திருக்கினம் எண்டு அங்கத்தைச் சனங்கள் கடும் கொதிப்பில இருக்கினம். அதைவிடக் கோபம் என்னெண்டால் , இந்த ஸ்பாவை அந்த மாவட்டச் செயலர் திறந்துவைச்சது தான். தனியார் ஒராளின்ர ஹொட்டலை , தன்ர கடமை நேரத்தில போய் அந்த மாவட்டச் செயலர் திறந்துவைச்சதே ஒரு பிழையான முன்னுதாரணம். அதைவிட , இப்பிடி மசாஜ் சென்ரரை திறந்துவைச்சது அடுத்த பிழை. அதைவிடப் பிழை என்னெண்டால், அந்த 'ஸ்பா' திறந்த இடத்தால போற பாதை ஆருக்குச் சொந்தம் எண்டு அங்கத்தைச் சனத்துக்கும், இந்தக் ஹொட்டலைத் திறந்தவைக்கும் இடையில ஒரு வழக்கு நடந்துகொண்டிருக்கேக்க, ஒரு மாவட்டச் செயலர் அந்த ஹொட்டல்காரர் பக்கம் போய் இப்பிடித் திறந்துவைச்சு, தன்ர சப்போர்ட் அவைக்குத்தான் எண்டு காட்டினதுதான். மாவட்டச் செயலர் எண்டால் சனத்தின்ர நன்மைக்காகத்தான் வேலை பார்க்க இருக்கினமே தவிர, இப்பிடி ஹொட் டல் கட்டுறவைக்கு ரிப்பன் வெட்டிற வேலை செய்ய அரசாங்கம் அவைக்குச் சம்பளம் குடுக்கேலையே. சனத்துக்கு நல்லது செய்யிற எத்தினை தனியார் இருக்கினம்., அவையளின்ர நிறுவனங்களப் போய் திறந்துவைச்சால் ஆரும் ஒண்டும் சொல்லப் போறேலை. ஆனால் தன்ர மாவட்டத்தை நாசமாக்கிற 'ஸ்பா'வை ஒரு மாவட்டச் செயலரே திறந்து வைக்கிறதை எப்பிடி ஏற்றுக்கொள்ள முடியும்?

அதைவிட அந்த 'ஸ்பா'வை திறந்துவைச்ச மாவட்டச் செயலர் முந்தி இந்துகலாசாரத் திணைக்களத்திலையும், கல்வித்திணைக்களத்திலையும் முக்கியமான பொறுப்புகளில இருந்து எல்லாரின்ர நன்மதிப்பையும் பெற்றவர். மற்றவை இப்பிடிச் செய்தால் கூடப் பரவாயில்லை.இப்பிடி எங்கட கலாசாரத்துக்கும், இந்துமதத்துக்கும், கல்விக்கும் பாடுபட்ட ஒருத்தர் , அதுகளுக்கு எதிரா முல்லைத்தீவில போய் எப்பிடி 'ஸ்பா' வைத் திறந்துவைச்சார்? எண்டுதான் எல்லாருக்கும் அதிர்ச்சியும், கவலையும்.

கதையோட கதையா உந்த ஸ்பா திறந்த காணிக்கு ஒருவழக்குப்போகுதெண்டுசொன்னனாலெல்லோ. அது என்னெண்டு நாளைக்குப் பார்ப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கவும். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறு பாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண் பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினரிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**துலாம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை எடுக்கலாம். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத் தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கக்கூடும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற் படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக் கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்து வேறுபாடு நீங்கும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

# யாழ். சிறைச்சாலையில் இன்று குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவமனைகளின் இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக யாழ்.சிறைச்சாலையில் குருதிக்கொடை முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ். சிறைச்சாலையின் அத்தியட்சகர் சீ. இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த முகாமில் குருதிக்கொடையாளர்கள் குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-25, 27.)

# பிரிட்டன் வர்த்தகத் தூதுவராக பிரபுஜோன் ஹனட் நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 4
இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய வர்த்தகத் தூதுவராக பிரபுஜோன் ஹனட் நியமிக்கப்பட்டுள்ளார்.
இங்கிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நோக்கங்களுக்கு இலங்கை மற்றும் பிரித்தானியாவின் சிரேஷ்ட பங்குதாரர்களுடன் இணைந்து சந்தை தொடர்பான அணுகலை ஊக்குவிப்பதும், இரு நாடுகளுக்கும் பரஸ்பர பொருளாதார வளர்ச்சியை வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் இவரது நியமனத்தின் நோக்கமாகும்.
இவர் ஒரு பிரித்தானிய தொழிற்சங்கவாதியாகவும், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக நீண்டகாலமாக பிரித்தானியாவில் குரல் கொடுத்து வருபவராகவும் விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,125)



நீர்வேலி அத்தியான் இந்துக்கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெற்றது. (ச-33-17)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பொங்கல் விழா, 'தைமாத விடியலின் கதிரொளிகள் தமிழரின் விடியலுக்காய் பரவட்டும்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ம. சோமபாலன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இதன் போது மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-25,125)

# செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 4
தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு யாழ். நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, திருமுறைகளின் மகிமை பற்றி பண்டிதர் தி.மனோஜ்குமார் உரையாற்றவுள்ளார். (ச-25,66)

# பொன்விழா

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம் ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிபூரணம் தம்பிராசா அன்பளிப்பு மண்டபப் பொன்விழா நாளை புதன்கிழமை மு.ப.8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் பங்கேற்கவுள்ளார். (ச-41)



யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முகமாக யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், மாட்டுவண்டிப் பவனி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-25,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உண்மையில் வாழ்க்கை மிகவும் எளிதானது, ஆனால் நாம் வலியுறுத்தி அதனை சிக்கலானதாக மாற்றுகின்றோம்.

– கன்பூசியஸ்

# ஆர்ப்பரிப்பும் அழுகையும்!

இன்று ஸ்ரீலங்காவின் 77ஆவது சுதந்திரதினம். ஆனால், இன்றைய நாளை 'தமிழர் பகுதிகளில் கறுப்புநாளாக' அறிவித்திருக்கின்றனர் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள். இந்த அறிவிப்பின் அடிப்படையில் வடக்கிலும், கிழக்கிலும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரி அவர்கள் போராட்டங்களிலும் ஈடுபடவுள்ளனர்.

காணாமலாக்கப்பட்ட விவகாரம், காணிவிடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, அடாத்தான காணிபிடிப்பு, அத்துமீறும் புத்தர்சிலைகள் என தாயகம் அரச தான்தோன்றித்தனத்துக்குள் மூழ்கியிருக்கின்றது. இதன் விளைவாக ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை கறுப்புநாளாக அறிவிப்பது இதுவொன்றும் முதல் முறையல்ல. கடந்த சில வருடங்களாகவே, இவ்வாறான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியான நகர்வே இவ்வருடமும் மேற்கொள்ளப்படுகின்றது.

போர் முடிந்து இன்று 15 ஆண்டுகள் கடந்துள்ளன. 2010ஆம் ஆண்டு தமிழர்கள் மத்தியில் என்னென்ன விடயங்கள் பெரும் பிரச்சினைகளாக இருந்தனவோ, இன்றும் அதே பிரச்சினைகள் அப்படியேதான் உள்ளன. எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. மஹிந்த, மைத்திரி, கோத்தாபய, ரணில் தற்போது அநுர என்று ஐந்து ஜனாதிபதிகள் ஆட்சியில் அமர்ந்திருக்கின்றனர். ஐவரும் இலங்கையின் அத்தனை பெரிய கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்தவர்கள்தான். நாடாளுமன்றப் பலம் கூடக் குறைவில்லாமல் இருந்திருக்கின்றது. எனில், எதற்காக 15 ஆண்டுகளாக ஒரே பிரச்சினைகள் எந்த முன்னேற்றமும் இல்லாமல் நிலைகொண்டிருக்கின்றன?

தீர்க்கப்படாத பிரச்சினை என்ற ஒன்று உலகில் இல்லை. ஆனால், தீர்க்கப்பட விரும்பாத பிரச்சினைகள் பல. அத்தகைய பிரச்சினைகள்தான் இன்றைய கறுப்பு நாள் அறிவிப்புக்கு முழுக்காரணம். இலங்கையில் 70 ஆண்டுகள் காலம் சாபக்கேடான ஆட்சிதான் இடம்பெற்று வந்தது என்று விமர்சித்த ஜனாதிபதி அநுரகூட, அந்தச் சாபக்கேட்டுத்தனத்தின் மிச்சமாகவும் - எச்சமாகவும் தான் தன் காலத்தை நகர்த்த விளைகின்றாரே தவிர, 2026 ஆம் ஆண்டிலாவது தமிழர்கள் கறுப்புக் கொடிக்குப் பதிலாக தேசியக்கொடியைப் பிடிக்கவேண்டும் என்று எண்ணவில்லை.

'இலங்கையர்களாக ஒன்றுபடுவோம்' என்று அழைப்புவிடுத்தால் மட்டும் போதாது. அதற்குரிய நடவடிக்கைகள் காத்திரமான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கே 'நடவடிக்கைகள்' என்று கோடு காட்டுவது, அரச கட்டமைப்பையும், இலங்கையின் ஒருமைப்பாட்டையும் பலப்படுத்தும் அரசமைப்பு ரீதியான செயற்பாடுகளை அல்ல. மாறாக, அதற்கெல்லாம் அப்பாற்பட்ட இணக்கப்பாட்டையே குறிக்கின்றது. இல்லாவிடில், தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்வரை - தமிழர்களின் வேணவா நிறைவேற்றப்படும்வரை சுதந்திரதினம் என்பது கறுப்பு நாளாகவே அமையும்.

கறுப்புக் கொடிகளா - தேசியக் கொடிகளா, தேசிய கீதமா - அரச எதிர்ப்பு முழக்கமா, ஆர்ப்பரிப்பா - அழுகையா, கொண்டாட்டமா - கூக்குரலா என்பதை அரசாங்கம்தான் தீர்மானிக்கவேண்டும்.




# மின்கட்டணக் குறைப்பு நடைமுறை



எரிசக்தி அமைச்சு தகவல்

கொழும்பு,பெப்.4
கடந்த ஜனவரி 31 ஆம் திகதி முதல் 20 வீத மின்கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.
பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை தாங்கள் பின்பற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
புதிய மின்கட்டணக் குறைப்புத் தீர்மானத்தின் பிரகாரம் வீடுகளுக்குரிய மின்கட்டணம் பாவனையின் அளவைப்பொறுத்து 29 வீதம் வரையும் , வழிபாட்டுத் தலங்களுக்குரிய கட்டணம் 21 வீதம் வரையும், ஹோட்டல்களுக்குரிய கட்டணம் 30 - 31 வீதம் வரையும், அரச நிறுவனங்களுக்குரிய கட்டணம் 11 வீதம் வரையும் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-33-6)

## அணுசக்தி அதிகாரசபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, பெப்.4
இலங்கை அணுசக்தி அதிகார சபையின் புதிய தலைவராக கலாநிதி துஷாரா ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். எரிசக்தி அமைச்சின் பொறியியலாளர் குமார ஜெயக்கொடியால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற துஷாரா ரத்நாயக்க, அணு பொறியியலில் முனைவர் பட்டம் பெற்ற ஒரே இலங்கையர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## அருங்காட்சியகம் தற்காலிக மூடல்

கொழும்பு,பெப்.4
கொழும்பு அருங்காட்சியகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்திலிருந்த பொருள்கள் சில அண்மையில் காணாமல் போயுள்ள நிலையில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் முடியும் வரை அருங்காட்சியகம் மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-6)

## கடந்தாண்டில் ரூ.1.132.6 பில்லியன் நாணயத்தாள் அச்சிடல்

கொழும்பு,பெப்.4
கடந்த 2024 ஆம் ஆண்டில் 1.132.6 பில்லியன் (1.13 டிரில்லியன்) ரூபா பெறுமதியான நாணயத்தாள்களை மத்திய வங்கி அச்சிட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
அதேவேளை கடந்த ஆண்டு டிசெம்பரில் மாத்திரம் 238.4 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-6)

## சிக்குன்குனியா மீண்டும் தாக்கம்

கொழும்பு, பெப்.4
சிக்குன்குனியா காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது என்று சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
மழையுடனான காலநிலையால் நுளம்புகள் பெருகியுள்ளதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
புதன்கிழமை - தை - 23
05.01.2025
சுபநேரம் : 05.05 – 06.35
ராகுகாலம் : 12.35 – 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை நிறைவடைவு உத்தரவாத விலை எங்கே?



## விவசாயிகள் கேள்வி

கிளிநொச்சி, பெப்.4

நெல் அறுவடைப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளபோதிலும் அரசாங்கத்தினால் நெல்லுக்கான உத்தரவாத விலை இன்னமும் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடம் என்றுமில்லாதவாறு கடுமையான நோய்த்தாக்கம் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஏக்கருக்கு 10 மூடைகளே தற்போது அறுவடையில் கிடைக்கின்றன. இந்தநிலையில் உத்தரவாத விலையின்மையால் அறுவடை செய்த நெல்லை தமது செலவினத்தைக் கூடப் பெற முடியாத வகையில் இடைத்தரகர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் என அரசாங்கத்தால் கூறப்பட்டபோதிலும் அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. அத்துடன் நெல்லை உலரவைப்பதற்குக் கூட இடமின்றி வீதிகளில் உலரவிடப்படுகின்றது.

இந்தநிலை தொடருமாயின் அடுத்துவரும் காலபோகங்களில் விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட வேண்டிநேரிடும். எனவே நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநேரத்தில் எமக்கான விதை நெல், மானிய உரங்கள் மற்றும் எமக்கான இழப்பீடுகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-22,113)

## கந்தபுராணப் படிப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 7 மணிக்கு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சஷ்டித்திதியில் கந்தபுராணப் படிப்பு இடம்பெறும் என ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ச)

## வல்லை, கோப்பாய் பாலங்களை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.4

வல்லைவெளி மற்றும் கோப்பாய் கைதடி வீதியில் உள்ள பிரதான பாலங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்று கடந்தவாரம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலங்கள் தகடுகளால் அமைக்கப்பட்டுள்ள நிலையில் வாகனங்கள் பயணிக்கும்போது விபத்துகள் இடம்பெறுகின்றன. விபத்துகளால் இறப்புகளும் ஏற்பட்டுள்ளன. அதனால் இந்தப் பாலங்களைச் சீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். (எ-125)



ஈகிள் நற்பணி மன்றத்தின் தலைவர் பா.சசிகரன் தலைமையில் வடமாகாண ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 200 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் கிளிநொச்சியில் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலகத் திட்டமிடல் மற்றும் பெண்கள் தேசிய நிலையைப் பிரதிப்பணிப்பாளர் அ.கேதீஷ்வரன் கலந்துகொண்டார். (ச)

## விக்டர் ஜவனின் அஞ்சலி நிகழ்வு

கொடிகாமம், பெப். 4

சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் விக்டர் ஜவனுக்கான அஞ்சலிக் கூட்டம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில், கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அஞ்சலி உரைகளை எழுத்தாளர் கருணாகரன் மற்றும் 'காந்தீயம்' பத்திரிகை ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி ஆகியோர் ஆற்றினர். (ச-25, 159)

## சிற்றுண்டி, தேநீர் விலை குறைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 4

சீனி மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலை தற்போது சரிவடைந்தபோதிலும் சிற்றுண்டிகள் மற்றும் தேநீரின் விலை குறைக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேநீர் மற்றும் சிற்றூண்டி வகைகள் உணவகங்களில் வேறுபட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. தேநீர் 40 ரூபா முதல் 50 ரூபா வரையும் பால்தேநீர் 80 ரூபா முதல் 100 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றன என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-33-17)





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் ருஷிறா குலசிங்கம் தலைமையில் கல்லூரியின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் தர்மகர்த்தா சபைத் தலைவர் ஜோன் சிட்னர், கௌரவ விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தர்ம கர்த்தாசபையின் முன்னாள் தலைவர் ஜொனாதன் கெஸ்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-22125)

## கிளி.யில் நெற்செய்கை அழிவு மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 4

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக அழிவடைந்த நெற்செய்கைப் பாதிப்புக் குறித்து மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் அண்ணளவாக 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடஇறுதி மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த கனமழையால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது. இந்தநிலையில் கமநல காப்புறுதிச்சபை, பிரதேச செயலகம், விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து இது தொடர்பில் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பித்துள்ளன. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி குறித்த குழுவினருக்குச் சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். மாவட்டச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கிளைச் சங்கங்களுக்கான கூட்டம் கே. கே. எஸ் வீதியிலுள்ள காமாட்சி அம்மன் மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் முன்னர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருந்ததாகவும் தற்போது காமாட்சி அம்மன் மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

(ச-25-17)

**வீடு வாடகைக்கு உண்டு**

அரசடி வீதி நல்லூரில்
சிறிய மேல்மாடி வீடு
வாடகைக்கு உண்டு.

**077 049 1513**

(CS/57400) J-1

## பெயர் மாற்றம்

செல்லத்துரை இரத்தினம் ஆகிய நான் எனது பெயரை சித்திரவேலு தங்கரத்தினம் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சித்திரவேலு தங்கரத்தினம் என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

சித்திரவேலு தங்கரத்தினம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2024 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளை பெற்று சித்தியடைந்த சென் ஜோண் பொஸ்கோ மாணவி

**லிங்கநாதன் ஸ்ரீசங்கவி**

அவர்கள் கல்வியில் மேலும் சிறப்புடன் முன்னேற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்

பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, மாமி, மச்சான்மார்-சரண், ஜது, சது
அண்ணா-ஆதி
அக்காமார்-தருணி, வைஷாலி

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி NCDB
## பதவி வெற்றிடம்
### தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)

எமது வங்கியானது வட மாகாணத்திலுள்ள கூட்டுறவுத்துறையின் சிறு உற்பத்தி தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்காக திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. இதன் நிமித்தம் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

**தகைமைகள்:**

1. German Technical Institute, National Vocational Training Institude (NVQ-Level 5), NDT, HNDE, NDES mechanical (or manufacturing) engineering/ technology தகைமை (அல்லது இணையான அனுபவம்)
2. 1 - 2 வருட அனுபவம்
3. உற்பத்தி இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் அவற்றை திருத்துவது பற்றிய அறிவு
4. MS Office அறிவு
5. சிறந்த தொடர்பாடல் திறன்
6. வட மாகாணத்தின் எப்பாகத்திற்கும் தேவையேற்படின் பயணம் செய்யக்கூடியவராயிருத்தல் (80% Field)

**மேலதிக தகைமைகள்:**

1. (சிறிய) உற்பத்தி தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவம்
2. கிளிநொச்சியையோ அதனை அண்டிய பகுதிகளையோ வதிவிடமாக கொண்டிருத்தல்

பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரக்கோவையை, lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

அல்லது

**தலைவர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்

விண்ணப்ப முடிவுத் திகதி : 27.02.2025

**மனித வள முகாமையாளர்**
**NCDB**

(CR/44250) J-1



# தைப்பூசம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
## உலகப் பெருமஞ்சத்திருவிழா

**காலம்:**
**11.02.2025**
**செவ்வாய்க்கிழமை**
**பால்குடப்பவனி**

**ஆரம்பம் :**
**காலை 6.00 மணி**

**ஆரம்பிக்கும் இடம்:**
**இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்.**



- பால்குடப்பவனி
- மாபெரும் பொங்கல்
- உலகப் பெருமஞ்சம் வீதியுலா பாரம்பரிய கலை, கலாச்சார நிகழ்வுகள்

தைப்புச தினத்தன்று யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் ஒன்று சேர்ந்து பால்குடத்தினை தமது சிரசில் ஏந்தி இணுவில் கந்தன் ஆலயத்திற்கு வந்து கேட்டவர்க்கு கேட்டவரம்மருளும் ஆறுமுகப்பெருமான் உடனுறை வள்ளி தெய்வானைக்கு பாலினால் அபிஷேகம் செய்து தமது நேர்த்தி கடன்களை நிறைவேற்றுவது வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.

தொலைவிலிருந்து ஆலயம் வந்து பால்குடம் எடுக்கும் அடியவர்களின் வசதி கருதி பால். குடம் என்பன ஆலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பால்குட பற்றுச்சீட்டு - 400/-

பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் (10.02.2025) திங்கட்கிழமைக்கு முன் ஆலய கரும பீடத்தில் காலை 9.00 - 11.00, மாலை 4.30 - 6.00 மணிவரை முன்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

காலை :- 9.00 மணிக்கு பாரம்பரிய முறைப்படி புதிர் எடுத்து வந்து பொங்கல் ஆரம்பமாகி 2.00 மணிக்கு நிறைவடையும்.

தொலைவில் இருந்து வரும் அடியவர்களின் வசதி கருதி பொங்கலுக்கான அனைத்து பொருட்களும் உள்ளடக்கி பொங்கல் பொதி செய்யப்பட்டுள்ளது. தேவையானவர்கள் பெற்று பொங்கிகொள்ளலாம்.

முருகன் அடியவர்கள் அனைவரும் அன்றைய தினம் ஆலயத்திற்கு வருகைதந்து பால்குடம் எடுத்தும் பொங்கல் பொங்கி வழிபாடாற்றி முருகப் பெருமான் அருளை பெறுவீராக.

**தைப்பூச பெருமஞ்ச கலைபண்பாட்டு மன்றம்**
**இணுவில் கந்தசுவாமி கோயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி லோகேஸ்வரி நவரத்தினம் (விமலாஸ்)

திதி: வளர்பிறை சப்தமி

தோற்றம் 07.03.1951 — மறைவு 27.01.2023

குழந்தையின் ஆறாத அழுகையுடன் மீண்டும் அழைத்த படியே

இரண்டு வருடங்களாய் நாமும்
உங்கள் நினைவில் நீங்கள் இல்லா வெறுமையில் நாங்கள்

நாங்கள் முதன் முதலில் பேசிப்பழகிய வார்த்தை
முதலில் எழுதிய பெயர் நீங்கள் தான் அம்மா

நீண்ட காலமாக உங்களோடு இருந்ததாலோ என்னவோ அதிகாலை
மாலைப்பொழுதுகளி ல் உங்கள் மடி தேடுகின்றோம் உறங்குவதற்காய்

நீண்ட காலமாக உங்கள் உள்ளே இருந்த நோய் உபாதைகளுடன்
அதை வெளிக்காட்டாத மன தைரியத்துடன் எல்லா நாட்களிலும் எமக்கு
தைரியமும், வாழ்க்கைக்கு வழியையும் சொன்னீர்.

பரவசம் மிக்க கம்பீரமான முக அமைப்புடன் அதே போல் எதையும்
சாதிக்கும் தைரியத்துடனும் எங்களுடன் எப்போதும் இருந்தீர்.

எங்கள் சிறு வயது கால சுகமான நினைவுகள் எல்லாம் அம்மா என்ற
கூக்குரலில் அடங்குகின்றது.

எங்களுடன் நீங்கள் நடந்து வந்த வழித்தடங்கள் முழுவதும் எந்த
முட்களும் எமக்கு தெரிந்ததில்லை. அவ்வளவு கரிசனையுடன்
எங்களில் இருந்தீர்.

ஒவ்வொரு முறை எம்மை பெற்றெடுக்கும் போதும் உயிரை பறிக்கும்
எமனையே நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள் என்பது தெரிந்ததே.

உதிரம் சிந்தி சிலை போன்ற உருவை பொறித்து உயிர் கொடுத்து
பெற்றெடுத்தீர் எங்களை.

அம்மா உங்கள் அருகில் இருப்பது போல் ஆனந்தம்
உலகில் எதுமில்லை.

கடவுளுக்கே சவாலாய் அமைந்த உங்களது கடைசி மூச்சும் பிரிந்த
நேரங்களும் என்றும் அழியாது எங்கள் நினைவுகளில்...

இல 38 காளிகோவில் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR/44233) J-1

(cs 46401)

## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா 16.02.2025

மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா 16.02.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. புனித லூர்து அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ பக்தர்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

- 07.02.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையின் பின் கொடியேற்றத்துடன் திருப்பலி ஆரம்பமாகும்.
- தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
- 15.02.2025 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புனித லூர்து அன்னையின் திருச்சொரூபத் தேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.
- 16.02.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெறும்.

பங்குத்தந்தை.
புனித தோமையார் ஆலய பங்கு மக்கள்.
மாதகல்.

## கூட்டம்

பளை வேம்பொடு கேணி சி.சி. த.க.பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் அதிபர் வ.ஜீவரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நாளைமறுதினம் வியாழக் கிழமை மு.ப. 9மணிக்கு நடைபெறும். (ச-25-9)

# 1ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்

## கதிரவேலு அருந்தவராசா (பிரபா)

(கரைச்சி பிரதேச சபை அலுவலக சாரதி)

04.02.2005

எதையும் தாங்கும் இதயம் எங்கள் செல்வம்
உள்ளத்தில் நல்ல உள்ளம் கொண்ட எங்கள் செல்வம்
என்று எம் வாழ்ந்து கொண்டிருக்கும் செல்வம்
நீங்கள் எங்கள் தெய்வம் வழிகாட்டி
எம்மை விட்டு பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எமை விட்டு பிரியாது

தோற்றம் 05.02.1980 — மறைவு 18.01.2024

239, சிவசுந்தரம்வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்,
தாய், தந்தை, சகோதரர்கள்,
மைத்துனமார்,மனைவி,
பிள்ளைகள்.

(CR/28929) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1936



மறைவு 02 . 02 . 2025

## இராசநாயகம் வேலாயுதம்

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது மாதகல் காஞ்சிபுரம் வீதியில் வசித்தவருமாகிய இராசநாயகம் வேலாயுதம் அவர்கள் நேற்றுமுன்தினம் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசநாயகம்-இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், கனகம், செல்லம், அன்னம் (அமரர்), ஜெகநாதன் (அமரர்), மகேஸ்வரி, சரோஜினிதேவி, விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன், காசிநாதன், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், திவாகரன் (அமரர்), பகீரதன்(லண்டன்), ஜெனார்தன் (தாதிய விடுதிச் சகோதரர், ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை), நாவலன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிஷாந்தினி (லண்டன்) வசந்தகுமாரி (மாதகல்) அனுசியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்மிதா, கவின், கரிஷன், தரணிகா, அஸ்விகா, ஆர்த்திகன், அதிரா, அயனன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2025) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் மாதகல் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காஞ்சியுரம் வீதி,
மாதகல்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/57408) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்து மாதா!

தென்மராட்சி 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். இந்தப் பிரதேசத்தில் சாவகச்சேரி- தலைநகரமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்துக்கள் அதிகளவில் வாழ்ந்தாலும் அனைத்து சமய மதத்தவர்களும் பரஸ்பரம் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது தனிச் சிறப்பானது.

சாவகச்சேரி கிறிஸ்தவ பங்கின் கீழ், மட்டுவில் வடக்குப் பகுதியில் குறிப்பாக கனகன்புளியடிச் சந்தியும் நுணாவில் சந்தியும் இணையும் வீதியில், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்துக்கு அருகான தேவாலய வீதியில் அன்னை லூர்து மாதாவின் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் நீண்டகால பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட மாதா ஆலயமாகும். ஒப்பீட்டளவில் சிறிய ஆலயமாக இருந்தாலும், அங்கு வீற்றிருந்து அருளாசி புரியும் அன்னையின் அன்பு வற்றாத நீரோடை போன்றது.

அளவில் சிறியதாக இருந்தாலும், ஆலயம் அமைவு பெற்றுள்ள இடமும் அதன் இயற்கைச் சூழமைவும் பக்தர்களின் மனச் சஞ்சலங்களை நீக்கி இயல்பாகவே அமைதிகொள்ளச் செய்யும் அளவுக்கு அற்புதமானது. ஆலயத்தின் நிர்வாகிகளாகப் பலர் செயற்பட்டு மாதாவின் இல்லத்தை சிறப்பாகவே வளர்த்தெடுத்துள்ளனர். பிற்பட்ட காலத்தில் லூர்து மாதா ஆலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் செபஸ்ரியாம்பிள்ளை, வைத்தியகலாநிதி பேருது பிலிப்ஸ், மருத்துவர் எட்வேட் ஆகியோர் ஆலயப் பணிகளை மட்டுவில் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றினர். சிறிதாக இருந்த மாதாவின் ஆலயம் பின்னர் வளர்ச்சி கண்டது.

லூர்து அன்னையின் ஆலயம் ஒரு கத்தோலிக்க வழிபாட்டுத் தலமாக இருந்தாலும், ஆலயச் சூழமைவில் வாழும் பல இந்துக்கள் அன்னையின் அன்பை தினம்தினம் நாடுபவர்களாகவே இருந்தனர், இன்றும் அவ்வாறே இருக்கின்றனர்.

### லூர்து மாதா உற்சவம்

அன்னை லூர்து மாதாவின் பெருவிழா ஜனவரி மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுக்கு வரும். திருவிழாத் திருப்பலியின் போது இடம்பெறும் திருச்சொரூபச் சுற்றுப்பவனி என்றும் தனித்துவமானது. ஆலயச் சூழமைவு அலங்கரிக்கப்பட்டிருக்க அன்னையவள் பக்தர்கள் மத்தியில் எழுந்தருளும் காட்சியைக் காண்பதற்கு பலநூறு பேர் திரண்டிருப்பர். திருப்பவனியின்போது தமது மனக்குறையை, துன்பத்தை, மன்றாட்டங்களை கண்ணீரோடு அவர்கள் மாதாவிடம் முன்வைப்பர். இது காண்போரை கண்கலங்க வைக்கும் உணர்வுப்பூர்வமான தருணமாகவும் அமையும்.

பிரான்ஸின் லூர்து நகரில், மாசற்றவளான லூர்து அன்னை கள்ளம் கபடம் இல்லாத குழந்தைகளுக்கு தன்னை வெளிப்படுத்திய அற்புதத்தை, இன்று பாரெங்கும் பலகோடி பக்தர்கள் பார்க்கும் வண்ணம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றாள். அவளின் அன்பு சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள சிற்றாலயத்திலும் உணரப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

**நா.தங்கவேல்**



# யாழ். பல்கலையில் கறுப்புக் கொடிகள்!

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இரவுடன் இரவாகக் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

இலங்கையின் சுதந்திரதினமான இன்றைய நாளை, அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் 'கரிநாளாக' காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அறிவித்துள்ளனர். இவ்வாறான பின்னணியிலேயே, அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குள் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (ம-இ)

# யாழ். ரத்னா விருது விண்ணப்பம் கோரல்

யாழ். பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்காக வழங்கப்படுகின்ற "யாழ்ரத்னா" விருதுக்கு

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி உரிய கலைத்துறையைச் சான்றுபடுத்தும் ஆவணப்பிரதிகளுடன் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (ச-41-25)


## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 01 . 1983



இறப்பு 27 . 01 . 2025

அமரர் தமனிகை பிரதாபன்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தமனிகை பிரதாபன் அவர்கள் கடந்த 27.01.2025 திங்கட்கிழமை அன்று இலண்டனில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், திரு. பிரதாபன் அவர்களின் அன்பு மனைவியும், ஆதிரையின் பாசமிகு தாயாரும், கிரீசன் (முகாமையாளர் சிங்கர் யாழ்ப்பாணம்), தவலாங்கி (ஆசிரியை யா/ மத்திய கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், சுபாசினி, ரூபன் ஆகியோரின் மைத்துனியும் வைகரி, கிருஷ்வீன், ருக்சவி ஆகியோரின் அத்தையும், பிரனீத், சப்தகி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2025) புதன்கிழமை At The Jack Carter Pavillion Fencepiece Roads Oakfields Playing Fields/Forest Road 1G6 3HD இல் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக City of London Cemetery & Crematorium Aldersbrook Road, London E12 5DQ இற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு நா.பிரதாபன் (கணவர்) 079 851 08041 (UK)
திரு சு.கிரீசன் (சகோதரன்) +947 739 10445 (இலங்கை)

(CS 2439) V-1


துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும்

# சிறாரின் உரிமைக்கு சட்டத்தரணிகள் குழு

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, தாமாக முன்வந்து சட்ட சேவைகளை வழங்குவதற்கான சட்டத்தரணிகள் குழாமொன்றை நிறுவுவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர்கள் தொடர்பான வழக்குகளில் முன்னிலையாகும் போது, ஏற்படும் தொழில்முறைச் செலவுகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகளையும் அந்தச் சட்டத்தரணிகளே ஏற்கவேண்டுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. 10 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் கொண்ட, நீதிவான் நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்ற வழக்குகளில் அனுபவம் கொண்ட சட்டத்தரணிகள் இந்தக் குழுவில் உள்வாங்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## மரண அறிவித்தல்

மண்ணில் 05 . 04 . 1936



விண்ணில் 03 . 02 . 2025

மடுத்தீன் ஞானப்பு

புதுக்குடியிருப்பு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் ஞானப்பு நேற்று (03.02.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவானி மடுத்தீன் அவர்களின் அன்பு மனைவியும், செபமாலை (கிளி), தேவதாஸ் (USA), புஸ்பராணி, அந்தோனிப்பிள்ளை (அன்ரன்), பிலோமினா, மேரிபுஸ்பம், சிலுவைராசா, தேவநேசம், அருட்பணி ம.பத்திநாதர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராசா, நீற்றம்மா (USA), அசோக்குமார், ஜெயவதி, யேசுராசா, காலஞ்சென்ற பிரான்சிஸ் (ஜீவன்), ஜெயமலர், பொன்யேசு ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
அருட்பணி ம.பத்திநாதர் (மகன்- பங்குத்தந்தை கோப்பாய்),
அருட்பணி அ.துஸ்யந்தன் (பேரன்)
(யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி)
077 958 0531


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம் தொடர்பில் போலித் தகவல்கள் பகிர்வு!

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் உள்ளன என்று வட்ஸ் அப் செயலி ஊடாகப் போலித் தகவல்கள் பகிரப்படுகின்றன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு தொழில் வாய்ப்பை வழங்குதல், வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிப்புகள் விடுக்கப்படவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ஏ.எம்.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

போலித் தகவல் தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸ் கணினி குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டுப் பரப்படும் இணைப்புக்களுக்குள் (லிங்) பிரவேசிக்கவோ, அவற்றைப் பகிரவோ வேண்டாம் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

(எ-இ)


# திருவிழாவிற்கான தற்காலிக கடைகள்

## அமைப்பதற்கான இடம்களை வழங்குதல்

இணுவில் கந்தசுவாமி, கோயிலில் 11.02.2025 செவ்வாய்கிழமை நடைபெறவுள்ள தைப்பூச மஞ்சத்திருவிழாவில் வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புபவர்கள் 08.02.2025 சனிக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் ஆலய முன்றலில் உள்ள அறிவாலயத்தில் வியாபார இடம் ஏலம்மூலம் வழங்கப்படவுள்ளது. எனவே வியாபாரம் செய்ய விரும்புவர்கள் தங்கள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் வருகைதந்து ஏலத்தில் பங்கு பற்றி உரிய கேள்வி தொகையினை உடனடியாக செலுத்தி இடத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்

இங்ஙனம்
இணுவில் கந்தசுவாமி கோயில்
பெறுநர்

(CS 2438) V-1

தொடர்புகளுக்கு:

**075 940 2236**

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின்
### மானிப்பாய் கடைகள் வாடகைக்கு வழங்குதல் - 2025

03.02.2025 ஆம் திகதி அன்று உதயன் பத்திரிகையில் 10 ஆம் பக்கம் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம் 03.02.2025 - 17.02.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 - பி.ப 3.00 வரை என திருத்தி வாசிக்கவும்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்
### படவரைஞர்களை பதிவு செய்தல் - 2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துகொள்ள விரும்புபவர்கள்) பதிவினை மேற்கொள்வதற்கான காலம் 28.02.2025 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் 28.02.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகிறேன்.

- NVQ – Level 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் NVQ – Level 4 in Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்திசெய்துள்ளதுடன் தற்போது NVQ – Level 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை தொடர்ந்து கற்பவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞருக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
  28.02.2025 இற்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்க தவறும் படவரைஞர்கள் தாமத கட்டணமாக
- ரூபாய் 1000.00 இனை செலுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
  வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்ய தவறிய அல்லது புதுப்பிக்க தவறிய
- எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.

04.02.2024

செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்

# மரண அறிவித்தல்



## அமரர் வைத்திலிங்கம் சரஸ்வதி

கட்டுப்பிலானை கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், அறுகுவெளி அரசடி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சரஸ்வதி அவர்கள் நேற்று (03.02.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தெய்வேந்திரராசா, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் மங்களேஸ்வரி, மனோகரி, மணிவண்ணன், பரமேஸ்வரி, மலர்விழி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி, மகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், சிவபாலசுந்தரம், கதிரகாமநாதன் மற்றும் ரஞ்சினி, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் இலகடி கோப்பாய் வடக்கு கோப்பாயில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 502 9277

# மரண அறிவித்தல்

மண்ணில்
12 . 04 . 1944



விண்ணில்
03 . 02 . 2025

## வைத்தியர் விநாயகமூர்த்தி ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற வைத்தியர்)

விடத்தற்பளை, மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி ஆறுமுகம் அவர்கள் நேற்று (03.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சின்னம்மா தம்பதியினரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் தனலட்சுமி அவர்களின் அன்பு மருமகனும் சாரதாதேவி (ஓய்வுபெற்ற மருந்தாளர்) அவர்களின் அன்பு கணவரும், அபிராமி (லண்டன்) இன் பாசமிகு தந்தையும் பிரதீபன் (லண்டன்) இன் அன்பு மாமனாரும் ஆதர்சன் இன் பாசமிகு தந்தையும், பிரதீபன் (லண்டன்) இன் அன்பு மாமனாரும், ஆதர்சன் இன் பாசமிகு பேரனும் ஆவார். செல்லாச்சிப்பிள்ளை, சிதேவிப்பிள்ளை காலஞ்சென்ற செல்லையா மற்றும் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் சிவமலர், செல்வமணி ஆகியோரின் மூத்த அன்புச்சகோதரனும் ஆவார். சகுந்தலாதேவி , திலகவதி, கமலாதேவி, காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் விவேகானந்தன் (கனடா), நித்தியானந்தன் (கனடா), கிருஷ்ணானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் விடத்தப்பளை மிருசுவில் இல்லத்தில் நடைபெற்று அவரது வீட்டில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தப்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விடத்தற்பளை
மிருசுவில்

தகவல்:
குடும்பத்தினர்.
077 198 3585, 077 722 3531

(CR 44252) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி இலக்கத்தகடுகளுடன் ஐந்து வாகனங்கள் மீட்பு

இரத்தினபுரி, கலவானை, பொல் கொட்டுவப் பிரதேசத்தில் உள்ள வாகன விற்பனை நிலையம் ஒன்றி லிருந்து போலி இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்ட ஐந்து வாகனங்கள் வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. வாகன விற் பனை நிலையத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

போலி இலக்கத்தகடுகள் பொருத்தப் பட்டு வாகனங்கள் விற்பனை செய் யப்படுகின்றன என்று வலான ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட் டுள்ளன. கைப்பற்றப்பட்ட வாகனங் களின் மொத்த மதிப்பு சுமார் ஏழு கோடி ரூபா என்று தெரிவிக்கப்படு கின்றது. (எ-இ)

## அநுரவுக்கு...

செயலாளர் சாகர காரியவசம் தெரி வித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுன பலம் பெறும். பெரமுன போட்டியிட வுள்ள சின்னம் தொடர்பில் இன்ன மும் முடிவெடுக்கவில்லை. கூட்ட ணியை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சாகர காரியவசம் மேலும் தெரிவித் துள்ளார். (அ-ம-44)

## கோத்தாபய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்க ளின் பிரதான சூத்திரதாரிகள் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் இராணுவப் புல னாய்வுப் பிரிவின் முன்னாள் பிர தானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே ஆகியோரை கைதுசெய்ய அரசாங் கம் அவதானம் செலுத்தியுள்ளது.

சுவிற்சர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள அசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்துவரவும் அரசாங்கம் தீர்மா னித்துள்ளது. அசாத் மௌலானா வுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை அங்கு நீக்கப்பட்டுள்ளது.

அசாத் மௌலானாவுக்கு எதிராக முறைப்பாடளிக்க பிள்ளையான் எனும் சிவநேசதுரை சந்திரகாந்தன் அழுத்தம் பிரயோகித்தார் என்று முறைப்பாட்டை வழங்குமாறு அசாத் மௌலானாவின் மனைவிக்கு சாய்ந் தமருது பொலிஸார் அறிவுறுத்தியுள் ளனர். இதன் பின்னணியில் உள்ள நடவடிக்கை என்ன என்பதை அரசாங் கம் வெளிப்படையுடன் பகிரங்கப்ப டுத்தவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## பீற்றூட்...

விவசாயக் குழுக்கூட்டத்தில் பீற்றூட் உற்பத்தியை விட, பயிர்ச்செய்கை யின் அழிவு அதிகமான அளவில் பதிவாகின்றது என்று அண்மையில் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, வடமாகாணப் பிரதி விவசாயப் பணிப் பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கனிடம் தக வல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பீற்றூட் பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எண்ணிக்கை உள் ளிட்ட தரவுகள் தன்னிடம் இல்லை எனவும் அதனை விவசாய போதனா சிரியர்களிடம் பெற்று சமர்ப்பிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வடமாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் 2024ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப் பகுதியில் 144 களவிஜயங்களை மேற்கொண்டு 40 ஆயிரத்து 900 ரூபா எரிபொருள் கொடுப்பனவுக்காக பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது. (அ-ச-125)

## உள்ளூராட்சித்...

வரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்பட வில்லை. உள்ளூராட்சித் தேர்தல் சட்டவரைபில் சபாநாயகர் ஒப்பமிட்ட பின்னரே தேர்தல் நடத்துவது பற்றி தீர்மானிக்கலாம். அதுவரை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படாது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தாக் கல் செய்யப்பட்ட மனு மீதான விசார ணைகள் இரகசியமாகவேநடைபெற்று வருகின்றன. இந்த விசாரணையின் தீர்ப்பும் பகிரங்கமாக வெளியிடப்பட மாட்டாது. நேரடியாக சபாநாயக ருக்கே அனுப்பிவைக்கப்படும்.

இந்த மனுவை தாக்கல் செய்தவர், புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டவரைவு மூன்றிலிரண்டு நாடாளு மன்ற பெரும்பான்மையுடன், சர்வ சன வாக்கெடுப்பும் நடத்தியே நிறை வேற்றப்படவேண்டும் என்று உயர்நீ திமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள் ளார் - என்றார். (அ-ம-6)

## தமிழ்த்...

தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை மையகத்தில் நேற்று மாலை நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை தமிழ்த்தேச மக்கள் தமது சுதந்திர தினமாகக் கருதுவது கிடையாது. ஏனென்றால், சுதந்திரம் கிடைத்த பின் னர் கொண்டுவரப்பட்ட புதிய அரசிய லமைப்புகள் ஒற்றையாட்சித் தத்து வத்தை உறுதிப்படுத்தும் வகையி லேயே அமைகின்றன. அவற்றைத் தமிழர்கள் தொடர்ந்து நிராகரித்தே வந்திருக்கின்றனர்.

தற்போதும்கூட புதிய அரசியல மைப்பை உருவாக்கும் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த அரசியலமைப்பும் ஒற்றையாட் சியை உறுதிப்படுத்தும் விதமாகவும் அடிமைச் சாசனத்தின் பிரதிபலிப்பாக வும் அமையும் பட்சத்தில் தமிழர்கள் அதையும் நிராகரிப்பார்கள். எனவே, தமிழர்களின் உரிமைகளை அரசிய லமைப்பின் வழியாக உறுதிப்படுத்தா மல் சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் தமிழில் தேசியகீதம் பாடுவதனால் றும் மாறிவிடப்போவதில்லை. அவ்வா றான சுதந்திரதினம் எமக்கும் எமது மக்களுக்கும் கரிநாளாகவே இருக் கும் - என்றார். (அ-ம-20-125)

## 285...

என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சா ளர் உறுதிப்படுத்தியுள்ளார். (அ-ம-இ)

## சுதந்திரதின...

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளான இரா.சாணக்கியன், ஞா.சிறிநே சன், இ.சிறிநாத், வலிந்து காணாம லாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி, செயலாளர் சுகந்தினி, அரசசார்பற்ற நிறுவனங் களின் ஒன்றியமான இணையத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன், சிவில் சமூகச் செயற்பாட்டாளர் இ. செல்வகுமார் ஆகியோருக்கே இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## இவ்வருடம்...

இந்த வருடத்தில் இதுவரை 11 துப்பாக் கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளன. இவற் றில், குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களால் ஐந்து துப்பாக்கிச் சூடு கள் இடம்பெற்றுள்ளன. தனிப்பட்ட பகை மற்றும் மற்றும் இதர காரணங் களால் 6 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங் கள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தாக் குதல்களில் ஏழு பேர் உயிரிழந்துள் ளனர். இருவர் காயமடைந்துள்ளனர். மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பி லும் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள னர். வெளிநாடுகளில் உள்ள பாதா ளக்குழு உறுப்பினர்கள் 68 பேருக்கு எதிராக சர்வதேசப் பிடியாணை பிறப் பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மூன்று பேர் டுபாயில் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என எமக்கு தெரியப்ப டுத்தப்பட்டுள்ளது. இவ்வாரத்துக்குள் அவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து, உரிய சட்டநடவடிக்கை எடுக் கப்படும்' - என்றார். (அ-ம-44)

## நீதிமன்றத்...

செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதி மன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டு ஏற்கனவே தமது குற்ற ஒப்புதல் வாக் குமூலத்தை வழங்கியுள்ளனர். இவ் வாறான நிலையிலேயே, மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த பிறிதொரு சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற் றிவளைப்பைத் தொடர்ந்தே அவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் 29 வயதுடையவர். அவரிடம் மேல திக விசாரணைகள் இடம்பெற்று வரு கின்றன என்று பொலிஸ் வட்டாரங் கள் தெரிவித்துள்ளன. (அ-ம-27)

## முதியவரொருவர்...

அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த முதியவர் வேதனை தாங்க முடியாமல் தனது உயிரை இவ்வாறு மாய்த்துக் கொண்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்ப டையில் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-66)

## போராட்டத்துக்கு...

போராட்டத்துக்குத் தடை விதிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பா ணம் நீதவான் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மனு நேற்று விசாரணைக்காக எடுத் துக்கொள்ளப்பட்டது. மனுவை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் பொதுமக்களின் போராட் டத்துக்குத் தடைவிதிக்க மறுப்புத் தெரி வித்துள்ளது. பொது அமைதிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், வீதி ஒழுங்கு விதிகளை மீறாமலும், அரச மைப்புக்கு அமையவும் போராட்டங் களை மேற்கொள்ளமுடியும் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-66)

## இன்று...

புகள் கைவிடப்படவேண்டும், அரசி யற்கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் போராட்டங் கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

'தமிழர்களின் வலியை அறிவேன் என்று தெரிவித்த ஜனாதிபதி அநுர கூட எம்மைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றார். தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாகத் தீர்க்கப்படாமலும், தீர்க்க விருப்பப்படாமலும் உள்ள பிரச் சினைகளை அரசாங்கம் மிக விரைவில் தீர்த்துவைக்கவேண் டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டங் கள் முன்னெடுக்கப்படவுள்ளன. பொதுமக்கள் பெருமளவில் ஒன்றுதி ரண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்' என்று தமது போராட்டம் தொடர்பில் காணாமலாக்கப்பட்ட உற வுகளின் உறவுகள் தெரிவித்துள்ள னர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேதப் பொருள்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

கொழும்பு, பெப்.4

ஆயுள்வேத வைத்தியம் மற்றும் ஆயுள்வேத அழகு சாதனத் துறையில் உள்ள அனைத்து தயாரிப்புகள் மற்றும் பொருள்களையும் தரமான தரத்தில் வழங்குவதை இலக்காகக்கொண்டு ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ராஜகிரிய ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஆயுள்வேத மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருள்கள் ஒழுங்குமுறை சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆயுள்வேதத்துறையின் தரமான மற்றும் உயர்தர பொருள்கள் மக்களுக்குக் கிடைப்பதில்லை. தற்போது அது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ள அமைச்சர் ஆயுள்வேத அழகுசாதனப் பொருள்கள், ஆயுள்வேத மருந்துகளின் அனைத்துத் தயாரிப்புகள் மற்றும் உட்பொருள்களை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார். (ஏ-இ)

## பொலிஸாரின் மதுச்சோதனை செய்யும் பலூன்களில் குளறுபடி

கொழும்பு,பெப்.4

மதுபோதையில் வாகனம் செலுத்துவதைப் பரிசோதிக்கும் பலூன்கள் மாறுபட்ட தகவல்களை வழங்குவதால் சிலர் அசௌகரியங்களுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கொழும்பில் வசிக்கும் சிரேஷ்ட ஆங்கில ஊடகவியலாளர் ஒருவர் காரை நிறுத்திவிட்டு அமர்ந்திருந்த வேளையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அங்கு வந்து நீங்கள் மது அருந்தியிருக்கிறீர்களா எனச் சோதிக்கவேண்டும் எனக்கூறி மதுப்பரிசோதனைப் பலூனை ஊதுமாறு பணித்துள்ளார்.

ஊடகவியலாளர் பலூனை ஊதியபோது அவர் மது அருந்தியிருப்பதாகப் பரிசோதனை முடிவு தெரிவித்தது. இதனையடுத்து பொலிஸார் காரை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் குறித்த ஊடகவியலாளர் தான் மது அருந்தவில்லை எனவும் வேண்டுமானால் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுங்கள் எனவும் கூறியுள்ளார்.

அதற்குப் பொலிஸார் அது எங்களுடைய வேலை இல்லையெனக் கூறி ஊடகவியலாளரை நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர். நீதிமன்றம் அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தான் மது அருந்துவதேயில்லை என நீதிமன்றில் கூறியுள்ளார்.

இதனையடுத்து சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளரை இரத்தப்பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவர் மது அருந்துவதில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் மதுப்பரிசோதனை பலூனை ஊதும்போது அவர்களது இரத்தத்தில் மதுசாரம் கலந்திருப்பதாக பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-6)

## முதல்தடவையாக கூடவுள்ள 'கோப்'

கொழும்பு, பெப்.4

கோப் குழு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் தடவையாகக் கூடவுள்ளது.

முதல் நாளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதானிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார். கோப் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும். ஆயினும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்து வப்படுத்தி இதுவரை எவரும் பெயரிடப்பட வில்லை. (ஏ-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்பு: 077 623 4204
076 755 8606

**சாரதி தேவை**

கட்டிட நிர்மாண நிறுவனத்திற்கு சாரதி தேவை

தொடர்புகளுக்கு: 077 202 0634

**மாபிள் செய்து தரப்படும்**

மாபிள் கல்சிய நீக்கி சிறந்த முறையில் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: 077 803 3199

**வாடகைக்கு**

- கஸ்தூரியார் வீதியில் கடை
- நாவலர் வீதியில் 2500 சதுர அடி மேல்மாடி கட்டிடம்
- கந்தர்மடம் சந்தியில் காணி என்பன வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 021 222 3479, 076 071 2676

## மரண அறிவித்தல்



மலர்வு 17 . 09 . 1951

உதிர்வு 02 . 02 . 2025

### முருகன் பாலசுப்பிரமணியம்

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (02.02.2025) ஞாயிற்றுகிழமை இறைவனடி சேர்ந்தார்.

காலம்சென்றவர்களான முருகன் - முத்து தம்பதியரின் மகனும், காலம்சென்றவர்களான தங்கராசா - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், தங்கராணியின் அன்பு கணவரும் ராஜி, ரஜனி (பிரான்ஸ்), சுபாஸ்கரன், சுமிதா (லண்டன்) மற்றும் காலம்சென்ற ராஜ்கபூரின் அன்பு தந்தையும் காலம்சென்ற பாஸ்கரன் மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்), ரோகிணி தேவி, சிவாகர் (லண்டன் ) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம்சென்ற தனுஜா மற்றும் பாரத் (லண்டன்), தட்ஜிகா (லண்டன்), சிந்துஜன் (நோர்வே), டிலக்சனா (கனடா), பவினாஸ், வியானாஸ், விஸ்னுஜன், வர்ஷா (லண்டன்), திஜாஸ் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு பேரனும் காலம் சென்றவர்களான ராசம்மா, செல்லபாக்கியம், நாகமுத்து, செல்வரத்னம் மற்றும் செல்வமணி, புஸ்பலீலா ஆகியோரின் சகோதரரும், காலம் சென்றவர்களான சண்முகராசா, செல்வராசா மற்றும் தவராசா, ஜேயாதேவி, வரதராசா, சுசீலாதேவி, நேசராஜா (கனடா), மதனராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நேசராஜா குடும்பம்
(+1(416)1 720 6469)

வடமராட்சி கிழக்கு,
செம்பியன்பற்று.

(CS/57405) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.